தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 21.02.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) வேளாண் தொழில் நிறுவுவதற்கு தொழில் முனைவோர்களுக்கான புத்தாக்க பயிற்சி

தொழில்நுட்ப வணிக காப்பகம் (TBI), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோவை, தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (TANII) - திட்டத்தின் கீழ் வேளாண் தொழில் முனைவோர்களுக்கான புத்தாக்க பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் (TNCDW) மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (TNSRLM) நிதி உதவியுடன் நடத்தப்பட்டது.

இத்திட்டத்தின் முதற்கட்ட பயிற்சி 28.01.2025 முதல் 01.02.2025 வரை மற்றும் இரண்டாம கட்ட பயிற்சி 17.02.2025 முதல் 21.02.2025 வரை தொழில்நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை வளாகத்தில் நடைபெற்றது. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 25 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சியின் முக்கிய நோக்கம், சுய உதவிக்குழு (SHG) பெண்கள் மற்றும் வேளாண் தொழில் முனைவோர்களை தொழில் வளர்ச்சிக்குத் தகுதியானர்களாக உருவாக்குதல் ஆகும். பயிற்சியில், தொழில்முனைவு வளர்ச்சி, பேக்கரி மற்றும் உணவுத்தொழில், உணவுப் பாதுகாப்பு விதிமுறைகள், தொழில் நுட்ப புதுமைகள், டிஜிட்டல் மார்க்கெட்டிங், திட்ட அறிக்கையின் தயாரிப்பு மற்றும் வெற்றிகரமான தொழில் முனனவோரின் நடைமுறை அனுபவம் ஆகிய அம்சங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பயிற்சியின் தொடக்க விழாவில், முனைவர்.E.சோமசுந்தரம், இயக்குநர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் அவர்கள் மற்றும் திரு.A.V.ஞானசம்பந்தம், செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஆகியோர் பயிற்சியின் முக்கியத்துவத்தை விளக்கினர். திருமதி R. மதுரா, திட்ட இயக்குனர் (மகளிர் மேம்பாடு), (TNSRLM), கோவை மாவட்டம் SHG' க்கு வழங்கப்படும் உதவி திட்டங்கள் பற்றிய தகவல்களை பகிர்ந்தார். திருமதி.S.கவிதா, கூடுதல் இயக்குனர் (LP), சென்னை அவர்கள் பயிற்சியை தொடங்கி பேக்கரி தொழில்துறையில் தொழில் முனைப்பு வாய்ப்புகள் பற்றிய சிறப்பு உரையாற்றினார்

*பயிற்சி நிறைவு விழா **21.02.2025** அன்று நடைபெற்றது. அப்போது பயிற்சி முடித்த* SHG *பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.*

*இந்த பயிற்சி திட்டம், தொழில்முனைவோருக்கு வியாபார உத்திகள், சந்தை தொடர்பான சவால்கள், நிதி ஆதாரங்களை பெறுதல் உள்ளிட்ட முக்கிய திறன்களை வளர்க்க உதவியாக இருக்கும் வகையில் அமைந்தது.*

**மக்கள் தொடர்பு அலுவலர்**